# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

<u>ஆணை நாள் 17.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 3368/B/20</u>**

திரு D. பார்த்திபன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம்.
திருவள்ளூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு D. பார்த்திபன் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு ட்டி. செந்தில்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 19.11.2019 தேதியிட்ட மனுவில், அயப்பாக்கம் ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட மார்க் தெருவில் தற்போது கட்டப்பட்டு இறுதி நிலையில் உள்ள கட்டிடம் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் CMDA அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதன் விவரங்கள் தொடர்பாக வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 14.01.2020 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 19.03.2020 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரருக்கு தகவல் வழங்கிவிட்டு, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரரின் சகோதரர் திரு ஷோபன்பாபு அவர்கள் கையெழுத்திட்டு பெற்றுக் கொண்ட தகவலின் நகல் ஆகியவற்றை ஆணையத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ளதன் அடிப்படையிலும், இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் அவர்கள் தான் கோரிய தகவல்கள் பொது தகவல்

அலுவலரால் தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், ஆகையால் மேற்கொண்டு விசாரணை தேவையில்லை என்றும் தெரிவித்ததன் அடிப்படையில், மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதால், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 3368/B/20**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வில்லிவாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகம்.
திருவள்ளூர் மாவட்டம்.

திரு D. பார்த்திபன்,
எண் 29, ஆசிரியர் தெரு,
அயப்பாக்கம்,
சென்னை 600 077.

Copy to: File
SCPA-19.11.20